பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

முனாஜாத்துப் பதிகம்

1 OCT 1952

காயற்பட்டணம்

திருப்புகழ்பாடிய மகாவித்வான் அருள்வாக்கி

காசீம் புலவரவர்களும்

பத்றுத்தீன் புலவரவர்களும்

ஷெய்கப்துல்காதிர் நைனார் லெப்பை

ஆலிம்புலவ ரவர்களும் பாடிய

முனாஜாத்துகளை

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1952.

இதன் விலை] [அணா 4

Q7:417
N52
114141

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

காயற்பட்டணம்

திருப்புகழ்பாடிய மகாவித்வான் அருள்வாக்கி

காசிம் புலவரவர்கள்

பூவாற்றிலிருந்து

நபிநாயகம்பேரிற் பாடிய

இன்னிசை.

முன்னவனே அஹதியத்தாய் முந்தியுஹதத்தாகிப்
பின்னவனே வாஹிதிய்யாய்ப் பேரான மெய்ப்பொருளே
தன்னவனே தயாபரனே சராசரமாய் நின்றவனே
மன்னவனே மின்னிசைக்க வல்லவ நீ காப்பாமே.

நூல்

ஆதியொளி வாகியகி ரண்டபகி ரண்டமொரு
சோதியொளி வாகிநின்ற தூண்டா மணிவிளக்கே
யோதியுணர் ஞானகலை யோலமிடும் ஸெய்யிதப்துல்
காதிறேகல் ஹாஷீம்குல காசிமுஸ்த பாகபியே. (1)

மெய்யெடுத்த நாண்முதலாய் மெய்யறியேன் வெட்டவெறும்
பொய்யெடுத்த பாவியைநும் பொன்னடிக் கொள்வீரே
மையெடுத்த சோனைமழை மாரிவெள்ளந் தூவதுஆக்
கையெடுத்து வேண்டுமக்கா காஸிமுஸ்த பாகபியே. (2)

பொய்மாற வென்றெருகாற் பொங்குபசும் புண்ணமுற்ற
மைமாற வேயருட்கண் வைத்திடுகா ளெங்காளோ
பெய்மாரி நோக்கிமிக்தப் பேருலகம் வேறுமொரு
கைம்மாறு செய்வதுண்டோ காஸிமுஸ்த பாகபியே. (3)

பூக்குந் தடநிழலும் பூவாது பூவின்முகில்
ஆக்குங் குடையுமன்பி யாக்களுக்கு மூண்டாமே
போக்குங் கொடுந்துயரம் பொறுக்கும் பொறையபயங்
காக்குங்கரு ணேசமக்கா காஸிமுஸ்த பாகபியே. (4)

ஒருகாலமும் மணாகா வொருகால் பிணியகல
வருகால மெக்காலம் வருகாத லறியேனே
குருகாலுஞ் செங்கையொரு கோதைதசை யூட்டிவைத்த
கருகால மூண்டவெங்கள் காஸிமுஸ்த பாநபியே (5)

சங்கை படைத்தவொரு தாய்கண்மகன் றாணிழந்த
வங்கை படைத்ததிம மார்க்குஞ்செய வுண்டாமோ
கொங்கை படைத்தவஞ்சிக் கொப்போடுக் தாருவரக்
கங்கை படைத்தவெங்கள் காஸிமுஸ்த பாநபியே. (6)

சோலூற்ற மன்னரிட்ட கோட்டைபதி னான்குமென்றார்
வேலூற்ற மானசமர் வென்று தங்கைக்கொண்டோரே
பாலூற்று நீலாற்றுப் பள்ள வெள்ளம் வெள்ளியனைக்
காலூற்று மக்கநகர் காஸிமுஸ்த பாநபியே. (7)

வென்றேறும் வேலரசர் வீரமுடி யாசனத்திற்
சென்றேறுங் கஞ்சமலர்ச் சேவடிதக் தாளுமையா.
நன்றேறு முத்திதரு ஞானக்கொழுந்தேதுளசிக்
கன்றேகண் சோலைமக்கா காஸிமுஸ்த பாநபியே. (8)

ஐதூக்குங் கையினகன் றாள்வேட்ட மாடுமழை
மைதூக்கும் போதரிக்கண் மாதருக்கா ளாவேனோ
பைதூக்கும் பாந்தளணைப் பாழ்நரகம் புக்காமற்
கைதூக்கிக் கொள்ளுமக்கா காஸிமுஸ்த பாநபியே. (9)

வேட்டுங் கனவிலொரு வேளைவெளி யாகவந்து
நாட்டுப்பாகதியு நல்கிடுநா ளெக்காளோ
நீட்டும்புக ழாபரணத் தீன்தீன் முஹம்மதெனக்
காட்டுங்கதி கோட்டுமக்கா காஸிமுஸ்த பாநபியே (10)

விண்பார்க்குஞ் சாதகம்போல் வேண்டியுமை மீண்டுமிசைப்
பண்பார்க்குஞ் சேணசுணப் பட்சியெனவுந்தேடி
யென்பார்க்கு மேழைதனக் கேமிரங்கி யெவ்வளவும்
கண்பார்த் தருளுமக்கா காஸிமுஸ்த பாநபியே. (11)

பூரியகோ யென்றொருகாற் புண்ணிருந்து கொந்தழற்ற
வீரியமே பொன்றியுள்ளம் விள்ளாதயர்வேனோ
பேரியபேர் கொண்டவுங்கள் பேருடையோனுக்குவரக்
காரியமேன் ஹாஷீம்குலக் காஸிமுஸ்த பாநபியே. (12)

முள்ளாறுங் கல்லாறு மூழ்கிப் பரந்த வெள்ளத்
துள்ளாறு மான்காட்ட வுந்துசனை கண்டோரே
புள்ளாறு காலுழப்பப் பூஞ்சோலை பூவிருந்து
கள்ளாறு பாயுமக்கா காஸிமுஸ்த பாநபியே. (13)

பால்சாய்க்கும் வெள்ளைவட்டப் பாராசர் வீரமுரண்
வேல்சாய்க்கும் வெற்றிக்கொண்ட வேதாந்தத் துப்பொருளே
சேல் சாய்க்கு முட்புறக்காய் செவ்வாழைக் குலைவரம்பிற்
கால்சாய்க்கு மக்கநகர் காஸிமுஸ்த பாநபியே. (14)

பாணியாத் தண்ணளிக்கன் பார்த்தெவ் வுயிர்க்கும்புக
லாணியாய்த் தன்னுயிர்போ லாளுங் கருணேசே
யேணியாய்க் கடந்தறுஷி லேகனைக்கண்டெட்டுசொர்க்கங்
காணியாய்க் கொண்டவெங்கள் காஸிமுஸ்தபா நபியே. (15)

கத்தூரி யகுளத்தி னூரமின்றி காட்டியவம்
புத்தூரினின்ற வெள்ளம் பொங்கிவரத் தானமைத்திர்
முத்தூரியகுடையின் மூவுலகுங் காக்குமெய்யிற்
கத்தூரி வாடைகமழ் காஸிமுஸ்த பாநபியே. (16)

வேலேறு முட்குடைவேல் வெய்யசிலை வேடனுக்காய்
மாலேறு கின்றுசலாம் வந்துசொல விண்டோரே
கோலே றிருலமூதேன் குண்டூர்ந்து வந்துகொடிக்
காலேறு மக்கநகர் காஸிமுஸ்த பாநபியே. (17)

மட்டூரைம் பாலளக மாணிக்கபொற் கொப்பையொட்டித்
தொட்டூர் கருங்கயற்கட் டோகையர்க ளாவேனே
வெட்டூ ரடுங்களப்போர் வென்றபின் மூன்றுபகல்
கட்டூரமர்ந்துவருங் காஸிமுஷ்த பாநபியே. (18)

சேந்தமட்டும் வாய்ந்தபதந் தெப்பந்தொட்டேன் பாவென்ன
தீந்தமட்டும் போந்துசந்றே நின்றுகரை யேற்றுமையா
சாந்தமட்டும் கஸ்தூரிச் சாலமனமேவு மெண்டி
காந்தமட்டும் வீசும்புய காஸிமுஸ்த பாநபியே. (19)

வெற்பூரு மற்புயமும் வெண்ணகையும் முத்திரையும்
பொற்பூர் முகாம்புயமும் பொன்னடியுங் காணேனோ
அற்பூரு மின்சொன்மறை யாரமிர்தச் செவ்வாயிற்
கற்பூர வாடைகமழ் காஸிமுஸ்த பாநபியே. (20)

போரூருஞ் செவ்வேற்கண் பொருதுமட வார்நிதம்பத்
தேரூருங் கோட்டாறுந்தேடி மெலிவேனோ
நீரூரும் பாரூரு நின்றாறுஞ் சீருடைய
காரூருஞ் செங்கையெங்கள் காஸிமுஸ்த பாகபியே. (21)

ஊசிமே னுட்களைந்தாங் குளதாயி ஷாமனையிற்
றூசிமே றும் மொளிவாற் றூன்கவர நின்றோரே
வீசிமேற் கொழுந்தோடி விண்பூத் தலர்ந்தபுகழ்
காசிமே ஹாஷிம்குலக் காஸிமுஸ்த பாகபியே. (22)

விண்ணின்மணி யேபொருளே வெண்மணியே ரத்தினமே
எண்ணின்மணி யேகுருவே யெவ்வுயிர்க்குந் தாயகமே
மண்ணின்மணி யேதருவே வாய்ந்தவுல கேழும்புகழ்
கண்ணின்மணி யேநிதியே காஸிமுஸ்த பாகபியே. (23)

கோடுபடுஞ் செம்பவளக் கொம்பனார் கண்வலைப்பட்
டூடுபடும் பாவியை யீடேற்றுவது மெக்காளோ
பீடுபடுந் தேறற் பெறுக்கா றுவட்டுஞ்செந்நெற்
காடுபடு மக்கநகர் காஸீமுஸ்த பாகபியே. (24)

பூவா ரணமுகத்தே புக்கியிறந் தாலுமுயிர்
தாவா ரணமுகத்திற் சஞ்சரிக்கக் கூடாதே
பாவா ரணமுகைக்கும் பைம்பொனகர் கற்பகப்பூங்
காவா ரணமுகைக்குங் காஸிமுஸ்த பாகபியே. (25)

மாகபடா மிட்டவிழி மாயவலைப் பட்டுழன்று
பூகபடா மிட்டதனப் பூவையர்க்கா ளாவேனோ
வேகபடா மிட்டமுக வேழமன்னர் மாளவெட்டிக்
நாகபடா துட்டவைவேற் காஸிமுஸ்த பாகபியே. (26)

பாம்போதி யன்றுமது பாதாம் புயம்பணிந்து
வீம்போதி வந்துசலாம் விண்டுசால நின்றோரே
பூம்போதி லஞ்சிறைப்பூம் புள்ளியுடைப்புள் ளினங்கள்
காம்போதி பாடுமக்கா காஸிமுஸ்த பாகபியே. (27)

சேல்பிடித்த பண்டூர்ந்து தெரித்திர நோயுந்தீர்ந்து
மால்பிடித்த சஞ்சலமு மற்று மொழியேனோ
பால்பிடித்த சிந்தை பாராக்கோ பாரமடையக்
கால்பிடித்தேன் கண்ணில்வைத்தேன் காஸிமூஸ்த பாகபியே. (28)

நீயிரக் காளொளியாய் நித்திலமாய் மாமயிலாய்
மாயிருளு லத்தீற்றின் வந்தகபி நீரல்லவோ
பாயிரகா மத்தோங்கும் பரமனைத் தென்றொழிய
ஆமிரகா மத்துடையீர் ஆலகபியுல்லாவே. (29)

நீலவட்ட வானீந்தி நிலவுவட்ட மொன்றுவரத்
தாலவட்டம் மீதில்ரண்டு சக்ரவட்ட மாக்கிவிட்டீர்
காலவட்ட மோங்குமுச்சிக் கதிரோற்குத் தான்கதலி
ஆலவட்டம் வீசுமக்கத் தாலகபியுல்லாவே. (30)

துக்கரண பாதகங்க டுண்டுகலி தீண்டாமற்
சக்கரவா ளத்தாண்ட சாபித்தெனை யாண்டுகொள்வீர்
செக்கரள கேசசெல்வ சித்திமுத்தி நல்கிமூவெட்
டக்கரத்தஃ தாளுமக்கத் தாலகபி யுல்லாவே. (31)

போற்றுவரா ரகத்மாவைப் பொறுப்பவராற் செய்தக்குற்றந்
தேற்றுவராற் மனப்பீடைத் தெரித்திரகோய் பாவமற
மாற்றுவரார் வல்லோன்முன் மன்றாடிச் சுவர்க்கப்பதி
ஆற்றுவரா ரும்மையல்லால் ஆலகபியுல்லாவே. (32)

பாதவகத் தாவளத்துப் பாரிசல்மான் பாரிசுக்காய்ச்
சீதவனத் தான்சிதறச் சீமுதம்பெய் வித்தோரே
மாதவனத் தந்தகஃ பாவைவலங் கொண்டுதிங்கள்
ஆதவனத் தோடுமக்கத் தாலகபியுல்லாவே (33)

கூனிருல் பாய்ந்துவெளிக் குண்டமுக டேருவித்
தேனிருல் கீறிவிழி தேனாறு வட்டொழுகிக்
கானிரு றுற்வளருங் கன்னியின் வாழைநிழல்
ஆனிரு றுஞ்சுமக்கத் தாலகபி யுல்லாவே. (34)

கூம்பூடு பாய்விரித்துக் கூன்பிறைய வாங்கவந்தீர்
தாம்பூடு பாய்துலவத் தான்பொருப்பிற் றந்தோரே
வீம்பூடு போனவுயிர் மீட்டமிர்த சஞ்சீவி
யாம்பூடுபோன்றமக்கத் தாலகபி யுல்லாவே. (35)

மூஸா பைத்துல்முகு மூறிற்சொற்ற சொற்சேரக்
கோசால மாய்கிறுத்திக் கொண்டிறைமுன் சென்றோரே
வாசாம கோசரமாய் வந்தகுரு ஆன்வழிதீன்
ஆசாரமாய் நடத்தும் ஆலகபி யுல்லாவே. (36)

பாசனல னேதும் படைத்திலே னுடையபவ
மோசமா கும்படிக்கே மோட்சந்தர வேண்டுமையா
மாசனமா ரும்புகழ வல்லோ னறுஷினிற்சிங்
காசனமே லேறுமக்கத் தாலநபி யுல்லாவே. (37)

தாறலைவில் வீசியபூந் தண்டலையி னூடுடும்பு
வேறலையி லாமலுமை வேண்டிவச னித்ததனுற்
பேறலைவி லாதவொறு பேரின்பக் கலீமாவை
ஆறலைவில் வேடற்கரு ளாளநபி யுல்லாவே. (38)

ஸலவாத்துப் பாட்டு

கொச்சகக் கலிப்பா

இன்னல்லாஹ வென்மே குர்ஆனிலே ஏகனுயகத்திறக்கியதின் பயன்-சொன்னன்யானு மலக்குகள் யாருமென் றூதர்மீதிற் சொல்லும் ஸலவாதனதயே-பன்னும்யாருமியம்புங்க ளொன்றிற்குப் பத்தி யானுரைப் பேனென்றதாலது-தன்னை யோதின ளுரு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே.

மன்னர்மூஸா நபிக்கொரு மானிடன் மாறுசெய்நவமாண்டடக் காத்திருந்-தென்னவேயிறை யென்னடியானிடத்தேகி நீர்கப னிட்ட டக்கும்மவ-னுன்னியநபி பேர்தவு ரூத்திற்கண் டோதினன் ஸல வாத்தொன்றதாலது-தன்னை யோதின ளுரு முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமே.

காதர்மூசா நபிதான் கியாமத்து நாளில்னுவினிற் ருகம்வராமலே யோதவேயிறை யேயறியேனதற் கோதையாறப்பே யென்றுரையா யெனத்-தூதராமிற ஸல்ஸலவாத்தைநீர் சொல்லுத்தாகம் வரா தெனச் சொன்னதாற், ருதநீரென்னை யாளு முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமே.

உங்கள் தீன்வழியா யிருந்துங்கள்பே ரோதக் கேட்டுடனே சலவாத்தினை-புங்கமாயுரையாத பகிலனைப்போல்புகில னிலையெனத் தேவரீர் சங்கைகாவு கொண்டோதினதாலது தன்னையோதவுக் தக் துக்கபுறினிற்-றங்குநாளென்னை யாளுமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே.

காட்டுமோகபியேயுமைத்தான் பிணை கானகத்தினில் வைத்தினி யான்வர மாட்டேனாகிலு மதும்மதானவர் வள்ளலேயுங்கள் பேர் சொல்லக்காதினிற் கேட்டுமேசல வாத்துரையார் வழிக்கேட்டிலாவே னென்றோதினதாலுமைச்-சாட்டினே னென்னை யாளுமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே.

மெய்க்குருனை விரித்திறையேவின வேதவாய்மை விலக்கன்று சுகை - சிக்கிராப்பக லாப்பெரும்பாவமே செய்தன்யானபடியே னென்ன செய்குவேன் - மக்கராஜமுஹம்மதே நும்சலவாத்தை யோதும் வரிசையினா லென்றன்-ஸக்கருத்தினி யாளுமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே.

துஞ்சிநாளுங் கபுறிலடங்கியே சோருநாளுங் கியாமத்தமளியச லஞ்சிநாளு மஹ்ஷறிலேஅதா பானநாளு மடியாரனைவருங்-கெஞ்சி நாளுமிறைவனே காரென்று கேட்குநாள்முஸ்தக் கீமெனும் பாலத் திற் றஞ்சநீரென்னையாளு - முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே.

தம்பிரான் சதுவானத்துச்சூரியன் றன்னையேசவளத்துயர் வாகவே முன்புகாட்டி நிறுத்துமப்போதலை மூளைவெந்து மயங்கி அந்தோ வென வெம்பியேயழு நாளைமஹ்ஷறு வேளையாள்பவர் நீரன்றிவேறில்லைத்-தம்பநீரென்னையாளு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே.

வாருலாவு மடமயிலாசியா மங்கைமாது மறியமுமேமணக் கோருலாவியுமக்கிறை செய்மணக்கோலமாய் மஹ்மூதினிலேமிப் பொன்னூருலரவிவருந்திருக் காட்சியுமுண்மையாதிதி தாரையுங் காணவே தாருநீரென்னையாளுமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே.

அல்லெல்லா கடங்தேகடங்தெழுவா னம்பரத்துயர் வாகியப் பாலறு, ஷில்லல்லாமுனமத்த ஹியாத்தையே யியம்பவாதி திருவுள மானதாற், சொல்லெல்லாம் ஸலவாத்தும் ஸலாமுமே சொன்னதா லதையானு மியம்பினேன், ஸல்லல்லாஹு அலாமுஹம்மது ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமே.

ஸலவாத்துப் பாட்டு முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

சென்னப் பட்டணத்திற் பிறந்து வளர்ந்து யாழ்பாணம் போய்த் தமிழிலக்கணமிலக்கியம் படித்துத் தேர்ந்தவராயும் முஹியித்தீன் புராணம் படித்தவராயும் தேர்ந்த மஷாயிகாயும் விளங்கும்

பதுறுத்தீன் புலவரவர்கள் பாடிய

முஹியித்தீன் முனாஜாத்து.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அலிபதின் அசிலாய்நின்ற அட்சரஞ் சுழித்துவீசிப்
பொலிவுறும் இஷ்க்குதாத்துட் புதைந்துஹேமீமதாய்நின்
றலிபெனும் இஷ்க்குமீறி அஹதுமீம் அஹமதான
மெலிவில்லா சிபத்துள்மீமாய் வெளிதரு முஹியித்தீனே. (1)

பேயலிபதனிற் சேர்ந்து பிரிந்திடும் பகறுதன்னில்
ஸேயுடன்மீம்ஹேயான சிர்றதாம்வலம்புரிக்குள்
ஹேயினுக்கிருபின்றிக் கிளம்பிடுந்தொனிக்குட்கண்ணே
பேயெனும் பக்காவுபெற்ற பேரொளி முஹியித்தீனே. (2)

தந்தையுந் தாயுந்தங்கள் தாமரைப் பதமேயல்லா
லெந்தனக் கொருவரில்லை யென்மனத் துயரந்தீரக்
கந்தமென் கதத்தைநாளுங் காணவே காக்ஷியாகத்
தந்தருள் கிருபைசெய்வீர் ஸாஹிபே முஹியித்தீனே. (3)

தவாபுள அமல்கள் செய்யத் தன்னபு சறியாமுடன்
ஹவாஉபு சதனிற்சிக்கிக் கலங்கியே யலைந்திடாமற்
தவாபெனும் அமலிற்சேரத் தமியனைக் காருமையா
தவாபதாந் திக்றுக்கெல்லாம் தலீலருள் முஹியித்தீனே. (4)

ஜயமணிக் கொழுந்தேயெங்கள் ஸையிதே முஸ்தக்கீமே
பயலிவ னுங்கள்பாதம் பக்தனென் றறியவேதா
னயமிகு ஷம்சுதாத்துள் நடுவினிற் றுலைந்நிற்கும்
புயமுக மதைக்காட்டும் பூரண முஹியித்தீனே. (5)

ஹைறயென நிறம்பியெங்கும் கையுமாய் நிலைநின்றோரே
வையமீ தடிமையென்றன் மனதினுட்டுயரந்தீரச்
செய்யினுங் கிருபையின்னே செப்பினே னுரைத்தேனிந்தப்
பையலைக் கிருபைக்கண்ணாற் பார்த்தருள் முஹியத்தீனே. (6)

கபியெனுந் தாத்திருசை கல்பினி நிலைநிறுத்தி
ஹபியெனுந் தாத்துதன்னைக் காணவே காக்ஷிதந்து
ஹபியெனுந் தாத்திற்சேரக் கருணையுங் கிருபைசெய்வீர்
ஹபியெனு மக்காம் அதனில்காலிறே முஹியித்தீனே. (7)

தம்மலி பதனிற்சேர்ந்து தவுலத்துச் செலுத்தகாடிக்
கும்மெனுங் கோட்டைக்குள்ளே குறித்தமந் திரியதான
முஹம்மது காமங்கல்கில் முடுகலிப் பாலனுலென்
றெம்மிறை புகலும்ஷைகே யெங்கள்யா முஹியித்தீனே. (8)

தௌக்கனு பவிக்காடித் தம்மதி லுறவுகூடிப்
பௌக்கெனும் பார்வையோடிப் பத்தியேஉறுஜூதேடி
ஷௌக்கெனும் றூஹுசாடி ஷம்சுதாத் ததனிற்கூடி
கௌபில்லா றுஜூலதாகக் காட்டும்யா முஹியித்தீனே. (9)

றப்பொடு கபியுல்லாதான் ரகசியம் பேசும்போது
ஹூப்புடனுமது நாறிற் குதுபதாய்க் கல்குக்கெல்லாம்
கட்புறு முமதுபேரர் காமமு முஹியித்தீனென்
றொப்பிலா விறைவன்சொல்ல வுதித்தயா முஹியித்தீனே. (10)

ஸாஹிதி னொலிகள்மற்றுஞ் சகலமாய் குதுபினோர்க்கும்
வாஹிதாம் கௌதாமென்ன வல்லவ னமைத்தகோவே
ஜாகிலென் றெனைத்தள்ளாமற் றவமூறு மக்கா முலாஹூத்
தாகிய தௌக்கையென்னுட் டக்தருள் முஹியித்தீனே. (11)

சீனெனுங் கண்ணடிக்குட் சிறந்தநான் கோலமாகத்
தானெனும் வடிவுகொண்ட தாசிமா நபியின்பேரர்
வானெனும் ஸனவுபரியுள் வாயிலைத் திறந்துகாணப்
பானெனுங் கிருபைக்கண்ணாற் பார்த்தருள் முஹியித்தீனே. (12)

ஷம்சொடு கமர்றுஜூமுந் தன்மனுமலக்கும் ஜின்னு
மும்பெய ருரைக்கலுற்ற வுடனது வணக்கஞ்செய்யு
நம்புத லும்மை யென்றும் நாடியே யிருக்கும் பைய
லெம்பிழை பொறுத்திப் போதி லிறங்கும்யா முஹியித்தீனே. (13)

சபுறில்லாத் தவக்கல் மற்றுந் தவமது நினையாப் பையல்
புவிதனிற் புலம்பு மாசைப் புல்லனென் றிகழ்ந்து விட்டா
லிவனின்மற் றொருவரில்லை யென்றுயர் தீர்ப்பதற்கே
யவையறிந் திரங்கும்கௌதுல் அஃலம்யா முஹியித்தீனே. (14)

லைபுள துன்யாவெண்ண கடையினு லாசைமீறிப்
பொய்தனை மிகவுங்காட்டிப் புல்லரோ டுறவுசெய்து
ஐபுறு சுவால்செய்யாம லடிமையென் றனக்குமுங்கள்
கைமுத லதுதந்தென்றுங் காத்திடு முஹியித்தீனே. (15)

தூசிமா நபியுல்லாதம் சங்கையா மொஜுஹுக்காகப்
பாசிக்கென் றெனைத்தள்ளாமல் பனுவுல்ப னுவதென்னும்
ஆசிலா மக்காமின்ஹாலை யடிமையுள் நடத்தல் செய்வீர்
வாசிலா மொலிகட்கெல்லாம் வள்ளலே முஹியித்தீனே. (16)

ளுல்மது மிகவுஞ்செய்த தோசினா னதனுற்றங்கள்
கல்பதின் கிருபையாலே கெதிபெற வேண்டுமெல்லாற்
சொல்வதற் கொன்றுங்காணேன் றுய்யவ னொளியிற்சேர
நல்குநுங் கிருபையின்னே நாயக முஹியித்தீனே. (17)

ஜனது தாத்துஜனி யரூபமாய்ச் சிர்றினுள்ளாய்
ஜனது அவ்வலான அஹுமது நபியுல்லாவின்
ஜனது ஆரிபான அஹததாம் பொருளையென்னுள்
ஜனதாற் காக்ஷிகாண அருளும்யா முஹியித்தீனே. (18)

கைபெனும் சிர்றதான கஸானத்தின் றிறவுகோலை
மெய்தரும் பாதைக்கெல்லாம் வெளிதரும் ராஜவாழ்வே
ஐபில்லா தடிமையானும் ஆரிபாம் பதவிசேரச்
செய்யுமே கிருபை யென்பால் ஸெய்யிதே முஹியித்தீனே. (19)

பாருல கடிமையானே படுந்துயர் தீர்த்தே யென்னைக்
காருமென் றிரங்கிக்கேட்டாற் காப்பதற் கவதியுண்டோ
நீர்மன மிரங்கிதாத்தினிசமதாங் காக்ஷிதந்து
பாருநுங் கிருபைக்கண்ணாற் பார்த்திப முஹியித்தீனே. (20)

குறுபது லாஹூத்தென்னுங் கோட்டையுட் புகுதச்செய்து
சுறுபது தாத்துமாயும் சுகமதாம் ஜதுபுபெற்று
ஹறுபில்லா லாமக்காமின் கணபதி வாழ்வுசேரக்
கிருபைசெய் தருள்வீரென்னுள் ஹிம்மத்தே முஹியித்தீனே (21)

காதிருயிலங்கி நிற்குங் கண்மணி தாத்துல்லாவே
ஹாதியா யெவர்க்கும்பாதை காட்டிடு மொலியுல்லாவே
ஓதிய வடிமையானு முமைத்துதித் திருப்பதெல்லாம்
நீதியாய்க் கபுலதாக்கு நினைவெக்கின் முஹியித்தீனே. (22)

காத்தருள் புரிவீர்கௌதுல் அஃலமே கதியென்றெண்ணி
நேத்திர நினைவினுசை நிதமுமே நுமதுபேரைத்
தோத்திரமாகச் சொல்லித் துதித்திட வடிமையென்னுட்
பாத்தருள் கிருபைசெய்வீர் பாஹிமே முஹியித்தீனே (23)

லாமது லிக்காவாய்நின்ற தாத்தெனு மிர்அத்துள்ளே
நாமவ னுகநிற்கு நாயகன் ஹுக்குமினுலே
ஆமெனு மவுத்துவேளை யஹதியத் திசுமையென்னுள்
சேமமந் திரமாய்நிற்க நினைவருள் முஹியித்தீனே. (24)

முத்தினுள் ளுருவாய்நின்று முழங்கிடும் தாத்துல்லாவே
யெத்திசை புகழுமூங்க விருபதத் துணையைநாடுஞ்
சித்திர வடிமை யென்றன் சிந்தையுட் கலக்கந்திரப்
புத்திரக் கிருபைக்கண்ணாற் பாத்தருள் முஹியித்தீனே. (25)

நூனது மகுபியாகி நூறதா விருக்குங்காலம்
தானெனு மிசுமைநாடி தாத்தெனும் இஷ்க்குப்பொங்கி
யானமுத் தலக்கதான அஹமது நபியுல்லாவின்
நூணினுள் சிபத்தாய்நிற்கு நூறதா முஹியித்தீனே. (26)

வல்லவ னவாவினுலே வந்திடு மனுஹரூன
சொல்லுமவ் வுயிர்கட்கெல்லாந் தூயனன் முஹுயித்தாக
நில்லுமென் றிறையோனும்மை நிறுத்திய மஹ்பூபேயென்
னல்லலை நீக்கியென்று மருள் செய்வீர் முஹியித்தீனே. (27)

ஹவாவெனுமாயை தன்னுற் காட்டியே மறைப்பதெல்லாம்
ஹவாவெனு மேலைவாயிற் கடந்தப்பா லிறித்தபேர்க்கு
ஹவாவவ னல்லாதில்லைக் காக்ஷியாம் ஹாபதாகும்
ஹவாவெனும் பறுக்கைநீக்கிக் காத்தருள் முஹியித்தீனே. (28)

லாமக்கா னுகியெங்கும் ராப்பக லற்றிநின்ற
மீமூலா மேடைவீதி வேந்தனுங் குடியுமில்லா
நாமவட் சரங்களற்ற தாத்தெனும் பொருளைக்காண
ஆமெனுங் கிருபைசெய்வீ ராரிபே முஹியித்தீனே. (29)

ஏகமா யிலங்கியெங்கு மிருந்தர சாளும்பீரே
யாகமா யொலிகட்கெல்லாம் அருள்பெற வுதித்தஷம்சே
யோகமா யேறும்வாசி யுச்சியி னிறைந்தஞானத்
தேகமாம் வாயில்தன்னைத் திறந்தருள் முஹியித்தீனே (30)

மத்தது றாஹின்கோலம் வரும்ஹம்சு கல்பின்கோலம்
சத்தனு கல்பதாகத் தரித்திடுங் கோலமென்ன
நற்றவப் பொருளின்சிர்றை நாடிநா னறியத்தங்கள்
சித்தம திரங்கியன்பு செய்தருள் முஹியித்தீனே. (31)

அத்தமு மீறுமில்லா னடங்கலும் கைபதாக
வந்தரு ளதமத்தென்னும் வளைந்ததாத் திருவின்கோலந்
தொந்தமாய்ச் சுக்குனாய்நின்ற துல்லிப மறிந்தகோவே
யெந்தனை யிரங்கியாளு மேகமா முஹியித்தீனே. (32)

ஆவது மொன்றுமில்லா தடிமையி னாசையாலே
யாவல் கொண்டுமதுபாத மடிக்கடி புகழநாடிப்
பாவல்செய் திடுமென் சொல்லிற் பகர்பிழை பொறுத்தெந்நாளுந்
காவல்செய் திடுவீரெங்கும் காதிறே முஹியித்தீனே. (33)

ஆண்டவர் தமக்குண்டான அடிமையின் செயலாற் சொல்லாற்
பூண்டதோர் பிழைகளெல்லாம் பொருத்தருளெந் தாய்தந்தை
மாண்டவர் பிழைபொறுத்து வல்லவன் லிக்காவிற்சேர்த்தே
யாண்டருள் கிருபைசெய்வீ ரஹாதுயா முஹியித்தீனே. (34)

எந்தனக்கறிவு தந்தோ ரிறைகுரு னேதித்தந்தோர்
வந்தனைக் கிருபைவைத்தோர் வரும்பொரு ளுள்ளமீந்தோர்
தொந்தமாங் கிளைஞரெலா சொற்பிழை பொறுத்தெந்நாளுந்
தந்தருள் கிருபைசெய்வீர் சமதுயா முஹியித்தீனே. (35)

முஹியித்தீன் முனாஜாத்து முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஷெய்கப்துல்காதிறு நயினார்லெப்பை

ஆலிம் புலவரவர்கள் பாடிய

முனாஜாத்து.

ஷாஹுல்ஹமீ தாண்டவர்கள்பேரில் முனாஜாத்து

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அஹதாய்க் குறிப்பொன் றில்லாத யளவுமறிவு மெட்டாதாய்
நிகராப்பொருளா மிறையவன்ற னெறிகொள் பெருமைக் குறுபொரு
அஹ்மதிறசூல் நபிபேர அவுலியாக்கள் கண்மணியாய்த் [ளாய்
தகுதிபெருகுந் தென்னாகை ஷாஹுல்ஹமீது நாயகமே. (1)

பதுறை யழைத்து வகிர்ந்து பின்னும் படர்வா னனுப்பு நபியிறசூல்
புதல்வியீன்ற மணிவழியே புதுமைகொண்டு வாறுங்கோவே
நிதமேவிளங்குங் காரணமே நிலவுங்கருணைப் பெருங்கடலே
சதமேதங்கடிருப்பதமே ஷாஹுல்ஹமீது நாயகமே (2)

தவுபாவென்னுங் குற்றுநிலை தாங்கும் ஆரிபீன்களெல்லா
நவமே கொள்ளுந் திருக்கழலே நாளுநம்பு மடியவர்கள்
பவமே சொல்லு மருணயம் பார்த்தே யிதங்கடரவேண்டுந்
தவமே நிதியே தென்னாகை ஷாஹுல்ஹமீது நாயகமே (3)

தாலிதாகுந் துறைநடுவே தங்குந் துறையி னதுமாக்கண்
மேலவி லடங்கலு கூறுக முழங்கும் மணியா யம்மணியே
காலமுழுதுந் திகழ்சுடரே கவலையாவுஞ் செலுமருந்தே
சாலிஹானோர் தவப்பயனே ஷாஹுல் ஹமீது நாயகமே. (4)

ஜெவுகருகிக் கபூலாவாய்ச் சிறந்த ஆரிலாகியது
குவிகொண் மிதாலா யவைசோடுங் குன்னிற் பிறந்த றூஹாகி
யெவையுமாகி நின்றவர்த மினியபிதுரா யுதிராத
தவமும்பயனு மாகிநின்ற ஷாஹுல்ஹமீது நாயகமே. (5)

ஹறமாம்பைத்துல் மகுமூரு மதுவாம் கஃபா நாடினவர்
திறமாம்படியே யருளுமருள் செய்யிதொலியே றும்பொருட்டால்
அறமால் பலாய்கள் சதாயிதுக ளனுகா தடியார் தம்பாலிற்
றறைமேல்வாரா தகற்றுமையா ஷாஹுல்ஹமீது நாயகமே. (6)

சகாயினான இல்மிடத்திற் கதித்ததுற்றத் துல்லைபலா
விசாய்க்தமணியிற் றிருமணியாய் வித்தாய் மூத்தாயெத்தாத
அசவாற்கலை தலையெழுப்பு மறத்தின்மூர்த்தி யாகிநித்தந்
தசாமாதவத்தி னரசுதவும் ஷாஹுல்ஹமீது நாயகமே (7)

தாயிபாகச் சதுபுடையோர் சாலிக்கவுத்த ஞானவர்கள்
காயிமகா விரண்டியார் கதிக்கும்வழியாய் விதிவிதிக்கும்
ஆயுங்கலைக ளாலரநாவாலாலம்பரிக்கும் பெருமானே
சாயுந்துன்பந் தென்னாகை ஷாஹுல்ஹமீது நாயகமே. (8)

தாத்தாய் சிபாத்தாய் அசுமாவாய்த் தங்கு மறுவாகுடன்கலந்த
பூத்தாய் மிதாலாய் அஜ்ஸாமாய்ப்புகழு மின்ஸான் காமிலுமாய்க்
கூத்தாயிவைகள் ஹுவாகிக்கொள்ளு மறிவாய்விளங்கி நிற்குஞ்
சாத்தாப்பயனே நயனாகும் ஷாஹுல்ஹமீது நாயகமே. (9)

றஹுமானென்னும் பீரிடத்தே நிலையுமறுஹு மடங்கலுக்கு
மகமாய்ப்புறமா யனுபவிக்கும் அஹுமதிறசூல் வழிப்பொருளே
மிகவேநம்பு மடியார்கண் மிடிமைத்துயர மணுகாமற்
றகைசேரருட்கண் டருவீரே ஷாஹுல்ஹமீது நாயகமே (10)

ஸீனத்துடைய துனியாவைச் சிறந்தமனைவி யெனக்கலந்து
மானத்துடைய ஆகிறத்தை மறக்கும்புல்லோர் நல்லோரென்
றீனத்துடனே யுறவாடி யிதய மறுகுஞ் சிற்றடியேன்
ஞானத்துடையீ ரபயமையா ஷாஹுல்ஹமீது நாயகமே. (11)

சிர்றில்உஜூதுமலுஹறுக்குஞ் சிர்றில் ஹக்கீக்கா யெவைகளுக்குஞ்
சிர்றிலசுரூ றில்மிடத்தில் சிர்றில்கதரு யிருதாவில்
சிர்றிலசுமாவுடைய நபி திருக்கண்மணியே பெருமணியே
சற்றொன்றணுகா தாண்டருளும் ஷாஹுல்ஹமீது நாயகமே (12)

ஷவுனுஞ்சூழும் பொருளே ஷைகுல்மஷாயிக் காகிநிற்குங்
கவுனுலடங்கு மகுலூக்கும் கருத்துங்காட்டும் சுஹுதுடையீர்
கவனமியாவு மணுகாமற் காக்குங் கிருபை நிறைகடலே
தவமூக்தகுதி யுடையவரே ஷாஹுல்ஹமீது நாயகமே. (13)

சிதுகுங்கிதுபும் கலந்தவுடற் றினமும் பொருளை விருப்பமுற்றுக்
கதிகொண்டறியா துளவோர்தங் கவலை யகற்றும் பரஞ்சுடரே
மதியே நிதியே பொன்னினெடு மலையேநிலையே நம்பினவர்
சதமேபதமே யருள்புரியும் ஷாஹுல்ஹமீது நாயகமே. (14)

லலாத்துடைய விருணீக்கி நன்மைவிளைக்கு நிப்பொதியே
விலாயத்துடையோர்க் கணிக்குருவே மடியோர்க்குதவுமகமேரே

கலாபந்திகழு மயில்வடிவங் காட்டு நயினார் மகமகவே
ஸலாமும் பேறும் பெருமரசே ஷாஹுல் ஹமீது நாயகமே. (15)

தாகாவென்னு மஹுமூதர் தம்பின் புடவிக் கிறையவன்சொல்
வாகாய் நிற்கும்படியாக வகுத்தேன் சிலரென் றருளுடையோர்
மோகாங் குதிபாய் வருமரசே மோட்சப்பதிவாழ் பெருமானே
சாகாவரிசைத் துறையுலவும் ஷாஹுல் ஹமீது நாயகமே. (16)

லல்லாங்காட்டும் பேழையுறு கறும்புள்ளிசைத்தும் பெரும்படையீர்
சுல்லாமனைவி விடுந்தலைசயிற் றெருக்கு மிடத்தை யமுதாக்கு
கல்லாருவக்கு நபிபோரா நானுயுவக்கு மகமேரா
சல்லாபங்க ளுறைமணியே ஷாஹுல் ஹமீது நாயகமே. (17)

ஆதியாய் நிலையதனி லடையும்சப்பு மூசப்பிபுவும்
நீதியாகக் கண்டுயரு நெறியுங்குறிய முடையவர்க
ளோதியோதி யுவக்குநுந்த மொளிர்தான் மலரே யெனக்கறிவே
சாதிமேன்மை யுறுங்கோவே ஷாஹுல் ஹமீது நாயகமே. (18)

கைபாயுள்ள பொருள்களெல்லாங் கண்டேயுணரு மகக்கண்ணும்
ஐபாயுள்ள காரியங்களனைத்து மறைக்கு மென்குருவே
மெய்பால் வியார மணுகாமல் விரும்பிநாளு மாண்டருளும்
சைபாயருமைப் பெருங்கடலே ஷாஹுல் ஹமீது நாயகமே. (19)

பனுவல்பனுவாந் துறையடைந்தார் பண்புந்தவமுந் தருங்கோவே
யனுதியுரைக்கும் ஷாஹமீதுடைய தருமைநிதியே பொன்னிதியே
கனவுமென்னு மூலகமென்னிற் கசிந்ததெளியேன் முகம்பார்த்துத்
தனதென் றுவப்ப தெப்போதோ ஷாஹுல் ஹமீது நாயகமே. (20)

இந்திலிடத்திற், சிறந்தவொளி கிளருமெகினி லெழுந்தருளி
சிந்தாகுலங்க ணீக்குமணி சேர்ந்தார் சுவர்க்கப் பெருஞ்சுடரே
நந்தாவரிசை வளர்நாகை நாகூர் என்னுங் கோவூரே
சந்தாடவியே கற்பகமே ஷாஹுல் ஹமீது நாயகமே. (21)

காவே முதலா யைந்தெழுத்திற் காட்டுநடுவே நாளாக
மேவுமுதற்பேற் புவியிடத்தும் விரிந்தபுயப்பேர் மற்றிடத்துங்
கோவாய்நிற்கு மாதியென்னக் குறிகொள் வினையை யுடையவரே
தாவும்பெருமைத் தென்னாகை ஷாஹுல் ஹமீது நாயகமே. (22)

லாமும் ஹேயு மகாமுமாய் நான்மூன் றாகி விளங்குவது
ஆமமுண்டு மதிமறைய வடக்கும் பொருளு முத்துறையாய்
நாமமபெற்றோர் வழிபெற்றே நாட்டும் விலாயத்தியல் பெற்றே
தாமம்பெற்றே வளர்தேளீர் ஷாஹுல் ஹமீது நாயகமே. (23)

முஹம்மது றஸூல்மணிபோன்று முழுதுமுணர்ந்த ஹுஸைன்மற
புகழுமிருபா னொருவரருள் புரிந்தசையது ஹமீதுத்தீன் [பிற்
மகவாம்பாத்தி மாதவ மணியா யணியார் உலகமெல்லாந்
தகைகொளமுத குணாலயமே ஷாஹுல் ஹமீது நாயகமே (24)

நூறு முதலாம் நான்கு பொருணாற்றெண் ணான்கு பகவியினி
லீறிலிருக்கு மடியார்க ளிதயமுணரு மணிவிளக்கே
வீறுந்தவமும் பெருஞ்செல்வம் வெற்றியனைத்து மருளுநுந்தந்
தாறுமணிப்போன் றவுலாவின் ஷாஹுல் ஹமீது நாயகமே. (25)

வாசித்தவாய் வருநபினார் வழியிலொழுகு நெறிபூண்டு
நேசித்தனேக மாட்டாரை நினைவுட்படுத்துந் தவப்பேறே
பூசித்தறியாச் சிறியவனும் பொன்னின்பதமே கெதிகொண்டேன்
ரூசத்தொழிலே நாளுமையா ஷாஹுல் ஹமீது நாயகமே. (26)

ஹவாவிலெழுந்த நாதமதைக் காட்டுந்தகுதித் திருமணியே
யுவானின்மதியாய் வருஷம்ஷைகு யூசபினையே தானியென
ஜாபினிருத்தி முறைமுறையே தயவுபுரியுந் தென்னாகை
தவாபுபுரியும் றவுலாவின் ஷாஹுல் ஹமீது நாயகமே. (27)

யாதுவளரு முளத்தூடு மினிமைபெருகுங் கண்ணாடும்
போதமமுதுக் கனியறிவே பொங்குமென்றன் றவப்பயனே
கோதுவினையாக் கொடுத்துன்பங் கொள்வரியாருஞ் சுகம்பெறவே
தாது மலர்த்தாடரவேண்டும் ஷாஹுல் ஹமீது நாயகமே. (28)

சிந்தைபெருகுங் களிபூண்ட ஷெய்கு அப்துல் காதிரென்போன்
வந்துதிக்கு பயனுதவி மகவென்றுரைக்கு நயனுதவும்
புத்திமகிழ்தா மாணிக்கப் பீர்வாள் ஹஸன்குத்தூஸுதவுஞ்
சந்நிதியே தென்னாகை ஷாஹுல் ஹமீது நாயகமே. (29)

ஷாஹுல்ஹமீ தாண்டவர்கள் பேரில் முனாஜாத்து
முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras

வெளிவந்து விட்டது!　　　　முதல் பதிப்பு!

பத்ஹுர் ரஹ்மான்
பில்பிக்ஹின் னுஃமான்.

(ஹனபி மதுஹபுக் குரியது)

பிரயோஜனமான கல்வி பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வைமட்டும் நமக்கு எடுத்துச் சொல்லுவது பிரயோஜன மில்லாத கல்வி. நாம் மனமும் ஒழுக்கமும் சீர் பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக் கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

இந்நூல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இருலோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி இருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல் புதிய பதிப்பு. ஆங்காங்கு அரபு மொழியில் ஓதவேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அரபியில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.

கலிகோ பைண்டு கிளேஸ் காகிதம் விலை ரூ. 3-0-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.